**பலபிடிய பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 07 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பலபிடிய பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய ரூபா 259,184 தொகை அரைச் சம்பளம் மற்றும் சம்பளமற்ற விடுமுறைக்காக கணக்குகளில் உரிய சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | வதுகெதர தகனகூட நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு கடன்கள் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற வேண்டிய ரூபா 4,001,170 இற்கான கடன்தொகை பெற வேண்டிய மூலதன உதவி என கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) | வதுகெதர தகனகூடம் நிர்மாணிக்கும் போது கடன்கொடுத்தோர் ரூபா 571,152 தொகை மிகையாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது, | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலைகளுக்காக தடுத்து வைத்தல் பணம் ரூபா 509,401 தொகை இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | முன்னைய ஆண்டு மற்றும் 2018 ஆண்டிக்காக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 5,000,000 தொகை கடன்பட்டோரு க்கு செலவு வைக்காமல் பொது வைப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த 13 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 13,114,886 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 168,614,377 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நித மற்றும் நிருவாக) விதி 218 | -- | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஒரு வருடத்திற்கு ஒருமுறையேனும் பரிசோதனை செய்திருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 571 | 16,815,575 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள வைப்பு மீதிகள் தொடர்பான விபரங்கள் காணப்படாததுடன் காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலதில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 45,365,855 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 41,924,230 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2018 மதிப்பீட்டு வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பீட்டு வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 8,130,000 | 6,988,267 | 5,033,370 | 15,106,612 | 5,830,000 | 6,685,001 | 4,814,060 | 13,121,714 |
| வாடகை | 2,650,000 | 144,700 | 963,025 | 369,164 | 2,600,000 | 128,550 | 96,550 | 1,187,489 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,581,000 | 5,530,761 | 5,540,011 | 181,030 | 3,505,000 | 4,691,833 | 4,685,583 | 190,280 |
| ஏனைய வருமானங்கள் | 117,455,000 | 56,565,652 | 31,528,075 | 140,400,603 | 105,350,000 | 103,132,284 | 103,132,284 | 115,363,027 |
| | 133,816,000 | 69,229,380 | 43,034,481 | 156,057,409 | 117,285,000 | 114,637,668 | 112,728,477 | 129,862,510 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 199,091,890 தொகையாக இருந்ததுடன், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 43,034,481 தொகையாக காணப்பட்டமையால் வருமானம் சேகரிப்பின் முன்னேற்றம் 22 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பாதீட்டின் பிரகாரம் வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய வீதவரியும் வரியும் வருமானம் ரூபா 20,109,981 தொகையாக இருந்ததுடன் அறவீடுகள் ரூபா 5,003,070 தொகையாக காணப்பட்டமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 15,106,612 இற்கான நிலுவை காணப்பட்டது. அதன் பிரகாரம் நிலுவைத் தொகையை அறவீடு செய்வது தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 நவம்பர் 21 ஆந் திகதி சபைத் தீர்மானத்தின் மூலம் ரூபா 875,973 இற்கான வாடகை வருமானம் பதிவழிப் பதற்காக பெற்றிருந்த முறையான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வருமானத்தை பதிவழிப்பதற்கு முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். | வருமானம் பதிவழிப்பதற்கு உரிய சபை தீர்மானத்தை சமர்ப்பிக்கின்றேன். எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 137,672,894 தொகை மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,723,960 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | பிரதான செயலாளரிடம் நிலுவைத் தொகை பெற்றுக்கொள்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த துணை விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் தொடர்பாக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் 20 ஆந் திகதிய 2015/53 இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தலுடன் சமர்ப்பிக்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் குப்பை முகாமைத்துவத்திற்காக நீண்டகால செயற்திட்டம் ஒன்று சபையிடம் காணப்படவில்லை. | குப்பைகள் அகற்றுவற்காக முறையான மற்றும் நீண்ட கால வேலைத் திட்டம் தேவைப் படுகிறது. | அரசாங்கக் காணி ஒன்று பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப் படுவதுடன் நீண்டகால வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகாரம் இன்றி நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 மாடிகளைக் கொண்ட கட்டிடம் தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் 2017 பெப்ரவரி 15 ஆம் திகதிய தபபா/வி/03/01/பொது கடிதத்தின் மூலம் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் படி சபைக்கு அறிவித்திருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | சபையின் சட்டவரைஞருக்கு, அங்கீகாரமற்ற நிர்மாண வேலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் படி கோவை ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப் பட்ட 11 பதவிகளில் காணப்பட்ட ஊழியர் வெற்றிடங்களை முறைப் பிரகாரம் நிரப்புவதற்கு 08 மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கும், மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதவி ஆகும். மீதியான பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவத் சேவை சுற்றறிக்கைக்கு முரணாக சேர்க்கப் பட்டிருந்த 06 ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் படி செலுத்துவதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 2,077,982 தொகை செலவு மேற்கொள்ளப் பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நி.பி. 71 இன் கீழ் எதிர்காலத்தில் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 08 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 242,480 தொகையாகும். | நிலுவைக் கடன் மீதியை அறவிடப்பட வேண்டும். | நிலுவைக் கடன் மீதி எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 ஏக்கர் 01 ரூட் 4.5 பர்சஸ் விளைச்சலுடனான வதுகெதர தொடவத்த தகனகூடம் மற்றும் மயானத்தை சபைக்கு உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சபைக்கு உரித்தாக் குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மேற்கூறிய வதுகெதர தொடவத்த தகனகூடம் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியில் 06 குடும்பங்கள் அங்கீகாரமின்றி வீடுகள் அமைத்து குடியேறி அந்த வீடுகளுக்கு நீர் மற்றும் மின்சார வசதி பெற்றிருந்த துடன் சபையினால் நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்து சபைக்கு சொந்தமான காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். | காணி அமைச்சருடன் கலந்துரையாடி இந்த நபர்களுக்கு மாற்று இடங்கள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4.2 விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1995 ஜுலை 24 ஆம் திகதிய தரைப் படையின் பொறுப்புக்கு எடுக்கப்பட்டு 2007 ஜுன் மாதம் சபைக்கு ஒப்படைக்கப்பட்டி ருந்த டபள்கப் வாகனம் பயன்படுத்த முடியாமையால் பதிவு இரத்து செய்து இரும்புக்காக விற்பனை செய்ய பரிந்துரைக் கப்பட்டிருந்த போதிலும் அப் பரிந்துரை களை செயற்படுத்தியிருக்கவில்லை. | விளைவற்ற வாகனங்களை அப்புறப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கப் வண்டி பிரதான செயலாளர் மூலம் சபைக்கு வழங்கப்பட்டிருந்த துடன், அவருடன் கலந்துரையாடி அகற்று வதற்கு எதிர்கால த்தில் நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவு விடயம் ஒன்றில் ரூபா 785,000 தொகைக்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தன. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக இலக்குச் செலவை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 06 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 45,257,596 சேமிப்புகள் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 27 சதவீதம் முதல் 83 சதவீதம் வரை வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக இலக்குச் செலவை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 05 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத் தொகை ரூபா 56,320,627 தொகையாக காணப்பட்டதுடன், அப் பெறுமதி 22 சதவீதம் முதல் 73 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக இலக்குச் செலவை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |